# 2020 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறைகள் ந.க.எண். அ3/3432/2018, நாள். 20.07.2020ல் உலகம் முழுவதும் COVID-19 எனப்படும் கொரோனா வைரஸ் நோய் பரவி வரும் நிலையில் கடலூர் மாவட்டத்தில் நோய் தொற்று அதிகரித்து வருவதால் அனைத்து நகராட்சிகள் பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் வசிக்கும் மக்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா என வீடு வீடாக சென்று பரிசோதனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் எனவே அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை கொண்டு வீடு வீடாக பரிசோதனை செய்யவும் ஒவ்வொரு வாக்குச் சாவடி நிலை அலுவலர் ஒவ்வொருவருக்கும் ஒரு தெர்மோ ஸ்கேனர் கருவி வழங்கப்பட்டு பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் மேற்படி தெர்மோ ஸ்கேனர் கருவி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய STC Technologies PVT Ltd., Chennai நிறுவனத்திடம் வாங்கி அவற்றில் விருத்தாசலம் நகராட்சிக்கு 59 எண்ணிக்கைகள் ஒதுக்கீடு செய்து அதற்கான செலவுத் தொகை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட 59 தெர்மோ ஸ்கேனர் கருவிகளையும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களைக்கொண்டு நகராட்சி பகுதி முழுவதும் பரிசோதனை செய்யப்பட்டது. இந்நிலையில் குறிப்பிட்ட STC Technologies PVT Ltd., Chennai நிறுவனத்தால் தெர்மோ ஸ்கேனர் 59 எண்ணிக்கைக்கு ரூ. 82600/– (GST 9 % + SGST 9% உட்பட வழங்கிட கோரி பட்டியல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனவே தொகை ரூ. 82600/– ஐ சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 3069/2020/எச்1)

<u>பொருள் எண். 2.</u>

விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண். TN-31-5697 வாகனத்தின் ஆயுள் காப்பீடு 06.06.2020 வுடன் முடிவடைவதால், மேற்படி வாகனத்தின் ஆயுள் காப்பீட்டினை 07.09.2020 முதல் 06.09.2021 வரை புதுப்பிக்க The New India Assurance Co Ltd., நிறுவனத்திற்கு ஆயுள் காப்பீடு தொகை ரூ. 10,864/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3195/2020/இ1)

<u>பொருள் எண். 3.</u>

இந்நகராட்சியில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி, வட்டி, அரசு மான்யம் ஆகியவை வழங்கிட கோரி பணியாளர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுகள் விண்ணப்பம் அளித்துள்ளார்கள். எனவே 2020–2021 ஆம் ஆண்டுக்கு ஓய்வு பெற்ற பணியயளர்களுக்கு மற்று. இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு சிறப்பு சேமநலநிதி, அதற்கான வட்டித் தொகை, அரசு மான்யம் ஆகியவை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 4.</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 2511/2017/ஜெ1, 23.04.2018ம் நாளிட்ட சுற்றறிக்கையில் 300 வீட்டிற்கு ஒரு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வீதம் நியமனம் செய்து நாள் ஒன்றுக்கு 50 வீடுகள் ஆய்வு செய்து கொசு புழு ஒழிப்பு தடுப்பு பணி மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களின் ந.க.எண். பஇ1/2163/2019, நாள். 18.03.2019ம் நாளிட்ட கடிதத்தில் டெங்கு காய்ச்சல் நோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் எனவே டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் உள்ளூர் சந்தை விலையின் அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டதன்படி இந்நகராட்சியில் 2019–2020 ம் கணக்கெடுப்பின் படி 20250 வீட்டிற்கு சுமார் 67 தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்களை 2019–2020ம் ஆண்டிற்கு விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு, விருத்தாசலம் அவர்களின் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சந்தை விகிதத்தில் அமர்த்திக் கொள்ள இந்நகர் மன்ற 3376 எண்ணிட்ட 31.05.19ந் தேதிய தீர்மானத்தில் அனுமதி பெற்று பணியாளர்கள் பணிபுரிந்து வரும் சூழ்நிலையில் மேற்படி அனுமதி 31.03.2020 உடன் முடிவடைந்துவிட்டது.

தற்போது மேற்படி பணியின் அவசியம் கருதி தேவைக்கேற்ப விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு, விருத்தாசலம் அவர்கள் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சந்தை விகிதத்தில் பணியாளர்களை மார்ச் 2021 வரை அமர்த்தி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரபணி அத்தியாவசியம் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்படி பணியாளர்களை விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் கொசுபுழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 5.</u>

விருத்தாசலம் நகரில் கொரோனா COVID-19 தடுப்பு நடவடிக்கைக்காக தொற்று பாதிக்கப்பபடட இடங்களில் சுண்ணாம்பு நீர் தெளிப்பதற்கு 20MT சப்ளை செய்யவும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு தொற்று பாதிக்காத வண்ணம் சுண்ணாம்பு நீர் சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 1.5 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 6.</u>

விருத்தாசலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள், தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், அலுவலக அனைத்து பணியாளர்களுக்கு கொரோனா தொற்று COVID-19 பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கைக்காக பொது சுகாதார அவசர அவசியம் கருதி முக கவசம் 20000 எண்ணிக்கையிலும், கை உறை 20000 எண்ணிக்கையிலும் வாங்கி வழங்கிட வேண்டி உள்ளதால் அதற்குண்டான செலவினம் ரூ. 12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 7.</u>

விருத்தாசலம் நகராட்சியில் கொரோனா வைரஸ் (COVID-19) பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்ககோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள், மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்கள் மற்றும் சார் ஆட்சியர், விருத்தாசலம் ஆகியோர் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க, பொது மக்களின் நலன் கருதி கொரோனா வைரஸ் (COVID-19) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் கண்டுள்ள பணிகளுக்கு விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | ஹைப் போ குளோரைடு 4000 லிட்டர் சப்ளை செய்யும் பணி. | Green Agro Environment Services, Madhuranthagam. | 250160/– |
| 2. | சானிடைசர் 100 மி.லி கொள்ளளவு கொண்ட 600 பாட்டில்கள். | ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக்குழு, விருத்தாசலம். | 27000/– |
| 3. | 4 எண்ணிக்கை தர்மா மீட்டர், சப்ளை செய்யும் பணி. | JO JNFOCOM, Anna Nagar, Madurai. | 35400/– |
| 4. | 1000 எண்ணிக்கை முககவசம், மற்றும் கையுறை 10000 சப்ளை செய்யும் பணி. | DOLPHIN Tailors, 40/5, Rajaji Road, 5 West Tambaram, Chennai. | 147500/– |
| 5. | 200 எண்ணிக்கை N 95 முககவசம் சப்ளை செய்யும் பணி. | K. Marimuthu, Register Municipal Contractor, No. 49, Subramaniyam Koil Street, Pudupalayam, Cuddalore. | 60480/– |
| 6. | 3000லிட்டர் லைசால், 2000 லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைடு மற்றும் 2MT பிளீசிங் பவுடர் சப்ளை செய்யும் பணி. | S. Parimala, Govt. Contractor, 19, Morai Everetpuram, Nellikuppam. | 738080/– |

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பொருள் குறித்த செலவினத் தொகையினை 2020–2021 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3721/2019/எச்1)

<u>பொருள் எண். 8.</u>

விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண். TN-31-AL- 6192 வாகனத்தின் ஆயுள் காப்பீடு 19.08.2020 வுடன் முடிவடைவதால்ல் மேற்படி வாகனத்தின் ஆயுள் காப்பீட்டினை 2021 ஆண்டு வரை புதுப்பிக்க The New India Assurance Co. Ltd., நிறுவனத்திற்கு ஆயுள் காப்பீட்டு தொகை ரூ. 8433/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி தொகை செலுத்தியுள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 9.</u>

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான 15 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் தினமும் காலை மாலை என இரண்டு வேலையும் நீரேற்றி குளோரின் கலந்து பாதுகாப்பான குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பணிக்கு விருத்தாம்பிகை மகளிர் சுயஉதவி குழு மூலம் 10 நபர்களை நியமித்து கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 3690, நாள். 31.12.19 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண். 3859, நாள். 29.05.2020ல் அனுமதிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் பொது சுகாதார பிரிவின் மூலம் மேற்படி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்கி வந்த 2 நபர்கள் மீண்டும் பொதுசுகாதார பணிக்கு சென்றுவிட்டதால் குடிநீர் பணி பாதிக்காமல் இருக்க காலியாக உள்ள 2 நபர்களை பணியமர்த்தவும், அதற்கு ஒரு நாள் ஊதியமாக ரூ. 360/– வீதம் இரண்டு நபர்களுக்கு 01.09.2020 முதல் 31.12.2020 வரை ஏற்படும் செலவினத்தொகை ரூ. 86400/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 10.</u>

அரசாணை (நிலை) எண். 60, நாள். 03.06.2020 அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் கடிதத்தின் படி, மாநகராட்சிகள் / நகராட்சிகள் / பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் சிறப்பு முகாம் வருடத்திற்கு இரண்டு முறை (ஜீன் மற்றும் டிசம்பர் மாதங்களில்) பொது நிதியை பயன்படுத்தி நடத்திட தெரிவித்ததற்கிணங்க, இந்நகராட்சியில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் சிறப்பு முகாம் நடத்திட ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 3331/2020/எச்1)

<u>பொருள் எண். 11.</u>

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 9,95,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 2,3,6 மற்றும் 7ல் தெருவிளக்குகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3802,நாள்.28.02.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (-) 0.03 % குறைவு |
| 2. | குளோப் டிரேடிங் கம்பெனி,<br>41டி/2, பிருந்தாவனம் நகர்,<br>ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (+) 1.26 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ்,27,ஜங்ஷன் ரோடு,விருத்தாசலம். நிறுவனம் அளித்துள்ள 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

<u>பொருள் எண். 12.</u>

விருத்தாசலம் நகராட்சிக்கு தேவையான 30 எச்.பி மோட்டார் – 3 எண்ணிக்கை , 20 எச்.பி மோட்டார் – 1 எண்ணிக்கை சப்ளை செய்யும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சிக்கு தேவையான 30 எச்.பி மோட்டார் – 3 எண்ணிக்கை , 20 எச்.பி மோட்டார் – 1 எண்ணிக்கை சப்ளை செய்யும் பணி | **SRI VENKATESWARA ENTERPRISES, 799 – A,JUNCTION ROAD, VRIDDHACHALAM** | ரூ.374685/– |

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 13.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 5,40,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 31 காந்தி நகர் 3வது தெரு நீட்டிப்பு வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3917, நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 27.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர் | (+) 1.41 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 993 /2020/இ1)

பொருள் எண். 14.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 94,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 16 தெற்கு பெரியார் நகர் காமராஜர் தெரு சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3915, நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 27.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.09 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.18 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.09 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 993 /2020/இ1)

பொருள் எண். 15.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 9,95,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 15 மற்றும் 16ல் தெருவிளக்குகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3803,நாள்.28.02.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 27.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | ராசி அண் கோ,<br>50எப்,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (-) 0.03 % குறைவு |
| 2. | ஆற்காடு எலக்ட்ரிக்ல்ஸ் & ஏஜென்ஸிஸ்,<br>852 , ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (+) 1.19 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ராசி அண் கோ, 50எப்,ஜங்ஷன் ரோடு,விருத்தாசலம். நிறுவனம் அளித்துள்ள 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

பொருள் எண். 16.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 3,75,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 31 காந்தி நகர் 3வது தெரு நீட்டிப்பு கிழக்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3916, நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 27.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.03 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.08 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 993 /2020/இ1)

பொருள் எண். 17.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 வயலூர் காலணி மேட்டுத்தெருவில் உள்ள மினி OHT க்கு புதிய பைப்லைன் அமைத்து புதியதாக கட்டைகட்டி 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்குக்கு லைன் அமைத்து வால்வு அமைத்து மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிருந்து மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 18.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 கல்லூரி நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேட்டரி வாகனம் வண்டி நிறுத்தும் ஷெட்டில் எல்.இ.டி விளக்கு , இரும்பு கம்பி வலை தடுப்புசுவர் மற்றும் சுவிட்ச் போர்டு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,16,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிருந்து மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 19.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 தில்லை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வந்த நிலையில் அப்பகுதி பொதுமக்கள் மேற்படி மழைநீர் வடிகால் பணியினை தில்லை நகர் முழுவதும் அமைத்து கொடுக்க வேண்டும் என நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க , மேற்படி தில்லை நகர் பகுதியில் ( பகுதி – 3) மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிருந்து மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 20.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 தில்லை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வந்த நிலையில் அப்பகுதி பொதுமக்கள் மேற்படி மழைநீர் வடிகால் பணியினை தில்லை நகர் முழுவதும் அமைத்து கொடுக்க வேண்டும் என நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க , மேற்படி தில்லை நகர் பகுதியில் ( பகுதி – 3) மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிருந்து மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 21.</u>

விருத்தாசலம் நகராட்சி பேருந்து நிலையத்தில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிக்கு UG கேபிள் சிமெண்ட் தளத்தில் அமைத்து ,மீட்டர் போர்டு அமைத்தல் மற்றும் காண்கீரிட் மேடை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.74,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 22.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 ஆலடி ரோடு மசூதி தென்புறம் உள்ள மினி OHT க்கு புதிய பைப்லைன் அமைத்து புதியதாக கட்டைகட்டி 3 இடங்களில் சிண்டெக்ஸ் டேங்குக்கு லைன் அமைத்து வால்வு அமைத்து மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,20,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 23.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 அண்ணா நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 8" Gate வால்வு மாற்றும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 13 அண்ணா நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 8" Gate வால்வு மாற்றும் பணி. | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | ரூ.5850/— |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 24.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 காமராஜர் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 6" Gate வால்வு மாற்றும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 10 காமராஜர் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 6" Gate வால்வு மாற்றும் பணி. | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | ரூ.5550/— |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 25.

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 3,64,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 10 லூர்க்காஸ் தெருவில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆழ்துளை கிணற்றிக்கு HDPE Hoose , Cable wire, 15 HP motor மற்றும் 150 மீட்டர் 3" பிவிசி பைப்லைன் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3892,நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 25.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.அருளாகரன், ஒப்பந்ததாரர் | (-) 0.07 % குறைவு |
| 2. | திரு.ஜி.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் | (+) 0.32 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.பி.அருளாகரன்,ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.07 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2076 /2020/இ1)

பொருள் எண். 26.

விருத்தாசலம் நகராட்சி சார்பாக மூன்றாண்டு சாதனை விளம்பரம் கீழ்கண்ட தினசரி நாளிதழில் வெளியிட்டதற்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தினகுரல் | 36000/– |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண். 27.

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் BOV 10 Nos பழுதடைந்துள்ளதால் மோசமான நிலையில் உள்ளது எனவும் இதனால் வாகனத்தை ஓட்டுவதற்கு சிரமமாக உள்ளது எனவும், இந்நகராட்சி 33 வார்டுகளில் வீடுகள் மற்றும் கடைகளில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது என சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் 25.08.2020ல் குறிப்பு கொடுத்துள்ளனர். பொது சுகாதார பணி நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் உள்ளூர் நிறுவனங்களில் பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணி அத்தியாவசியம் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்படி பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 28.</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு மூன்று கோட்டங்களிலும் பொது சுகாதார பணி மேற்கொள்ள தளவாட சாமான்கள் சப்ளை செய்யும் பணிக்கு 17.08.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேஷன்,<br>60/101– A1B,<br>நாமக்கல். | 3,33,420/– |
| 2. | ஸ்ரீ ஆதனூர் அம்மன் டிரேடர்ஸ்,<br>1/34, காலப்பன்நாயக்கன்பட்டி,<br>நாமக்கல். | 3,57,405/– |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ், கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(2455/2020/H1)

## பொருள் எண். 29.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 மேட்டுக்காலணி சுடுகாட்டில் சிமெண்ட் அமைக்கும் பணி நடைபெற்று வந்த நிலையில் அப்பகுதி மக்கள் மயானத்தில் விடுப்பட்ட பகுதிக்கும் சேர்த்து சிமெண்ட் சாலை அமைத்து தரக் கோரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அப்பகுதியில் கூடுதலாக விடுப்பட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிருந்து மேற்கொள்ளலாம்.

## பொருள் எண். 30.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 மேட்டுக்காலணி சுடுகாட்டில் சிமெண்ட் அமைக்கும் பணி நடைபெற்று வந்த நிலையில் அப்பகுதி மக்கள் அருகில் உள்ள ஏரிக்கரையில் மழைகாலங்களில் வெள்ள நீர் நிறைந்து கரையோரம் உள்ள மண் சரிந்து சிமெண்ட் சாலையினை மூடிவிடும் என்பதால் தடுப்பு சுவர் அமைத்து தரக்கோரியதற்கிணங்க , சிமெண்ட் சாலை அருகில் (வலதுபுறம்) தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிருந்து மேற்கொள்ளலாம்.

## பொருள் எண். 31.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 கல்லூரி நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள சுற்றுசுவர் உயரம் குறைவாக உள்ளதால் பாதுகாப்பு கருதி சுற்றுசுவரினை உயர்த்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிருந்து மேற்கொள்ளலாம்.

## பொருள் எண். 32.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 தெற்கு பெரியார் நகர் திருவள்ளுவர் நகர் சாலையில் உள்ள பழுதடைந்த பழைய பாலத்திற்கு பதிலாக புதிய சிறுபாலம் கட்டிதர அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பகுதியில் புதிய சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிருந்து மேற்கொள்ளலாம்.

<u>பொருள் எண். 33.</u>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P. (MD) No. 5310/2015ல் வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில் 27.02.2015ல் உறுத்துக் கட்டளை பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு. கே.கே. ராமகிருஷ்ணன் அவர்கள் வழக்கு தொடர்பாக கூடுதல் வாதுரை (Additional Affidavit) தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்பிக்க நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து மின்னஞ்சல் கடிதம் அனுப்பி வைத்துள்ளார் மேலும் மேற்படி கடிதத்தில் வழக்கறிஞர் கட்டணம் ரூ. 7500/– ஐ அனுப்பி வைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக வழக்கு தொடர்பான கூடுதல் வாதுரை (Additional Affidavit) தயார் செய்து கடந்த 27.08.2020ல் வழக்கறிஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. 7500/– வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 34.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6ல் உள்ள வி.என்.ஆர் நகரில் பிரதான சாலையில் இயங்கி வந்த போர்வெல் நீர்மட்டம் குறைந்துள்ளதால் பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய குடிநீர் தடைபட்டுள்ளது. இது குறித்து உயர்திரு சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அப்பகுதியில் ஆய்வு செய்து குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதிய ஆழ்துணை கிணறு மற்றும் நீர் மூழ்கி மோட்டார் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,80,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண். 35.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின் உதிரி பொருட்கள் வாங்கி தரகோரி மின் கம்பியாளர் குறிப்பு அளித்ததற்கிணங்க, தெருவிளக்கு மின் உதிரி பொருட்கள் வாங்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண். 36.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் கொரோனோ COVID-19 தடுப்பு நடவடிக்கைக்காக தொற்று பாதிக்கப்பட்ட இடங்களில் லைசால் 1000 லிட்டர் ஹைப்போ குளோரைடு 2% 2000 லிட்டர் சப்ளை செய்யவும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு தொற்று பாதிக்காத வண்ணம் லைசால் 1000 லிட்டர் ஹைப்போல குளோரைடு 2% 2000 லிட்டர் சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 3,00,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 37.

விருத்தாசலம் நகரில் கொரோனோ COVID-19 தடுப்பு நடவடிக்கைக்காக தொற்று பாதிக்கப்பட்ட இடங்களில் Eco Clean – 50 Plus கிருமி நாசினி 200 லிட்டர் சப்ளை செய்யவும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு தொற்று பாதிக்காத வண்ணம் Eco Clean – 50 Plus கிருமி நாசினி சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 7,20,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.